பொதுப்பணித் துறையினர் ஆர்ப்பாட்டம்

திருச்சியில் நீர்வளத் துறை மண்டல அலுவலகம் முன்பு செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை கணக்கு மற்றும் ஆட்சிப் பணியாளர் சங்கத்தினர்.

திருச்சி, ஜூலை 28: காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, திருச்சியில் தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை கணக்கு மற்றும் ஆட்சிப் பணியாளர் சங்கத்தினர் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி மண்டல நீர்வளத் துறை அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட செயலர் சோ. முருகானந்தம் தலைமை வகித்தார். முன்னதாக, மாவட்ட பொருளாளர் ஜெ. கருணாகரன் வரவேற்றார். இதில், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலர் கா. பால்பாண்டி மற்றும் திரளான சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில், உதவியாளர் நேரடி நியமனத்தை 50 சதவீதம் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்வதை ரத்து செய்து, காலியாக உள்ள 450-க்கும் மேற்பட்ட உதவியாளர் பணியிடங்களை பதவி உயர்வின் மூலம் உடனடியாக நிரப்ப வேண்டும். ஏற்கெனவே இருந்த விதிகளின் படி, அனைத்து அலுவலர்களுக்கும் பதவி மாற்றம் மூலம் இளநிலை வரை தொழில் அலுவலர் பதவி உயர்வு வழங்க வேண்டும்.

அரசு ஊழியர்களைப் போல, பொதுப்பணித் துறை மற்றும் நீர்வளத் துறை ஊழியர்களுக்கும் கலந்தாய்வு மூலம் பணியிட மாறுதல் வழங்க வேண்டும். கோட்டக் கணக்கர் பதவியை மாநில சேவையாக்க வேண்டும். கருணை அடிப்படையில் 25 சதவீத நியமனத்தை அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

போதை மாத்திரைகள் விற்ற இருவர் கைது

திருச்சி, ஜூலை 28: திருச்சியில் போதை மாத்திரைகள் விற்பனை செய்த இளைஞர்கள் இருவரை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

திருச்சி பாலக்கரை காவல் நிலைய எல்லைக்குள்பட்ட பகுதிகளில் காவல் ஆய்வாளர் சிவசுப்பிரமணியன் தலைமையிலான போலீஸார் திங்கள்கிழமை சோதனை மேற்கொண்டனர்.

அப்போது, பாலக்கரை பெல்ஸ் மைதானம் அருகே பாழடைந்த ரயில்வே கட்டடத்தில் போதைமாத்திரைகள் விற்பனை செய்துகொண்டிருந்த காஜா பேட்டையைச் சேர்ந்த கே. நாகராஜ் (23), எப். காஜா மொய்தீன் (26) ஆகிய இருவரையும் போலீஸார் கைது செய்தனர்.

மேலும், அவர்களிடமிருந்து ரூ. 64 ஆயிரம் மதிப்பிலான 214 போதை மாத்திரைகள், போதை ஊசிகள், திரவ போதை மருந்துகள் மற்றும் கைப்பேசி ஆகியவற்றையும் பறிமுதல் செய்தனர்.

பணி நிரந்தரம் செய்ய கோரிக்கை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பருவகால கொள்முதல் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

திருச்சி மாவட்ட ஆட்சியரகம் அருகே செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பருவகால கொள்முதல் பணியாளர்கள்.

திருச்சி, ஜூலை 28: திருச்சியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக பருவகால கொள்முதல் பணியாளர் சங்கத்தினர் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி மாவட்ட ஆட்சியரகம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியராஜ் பிரவீன் தலைமை வகித்தார்.

இதில், திருச்சி மண்டலத்தில் 2014 முதல் 2023-ஆம் ஆண்டு வரை பணி நியமனம் பெற்றுள்ள அனைத்து நிலை பருவகால கொள்முதல் பணியாளர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

நிரந்தரப் பணியாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தைபோலவே பருவகால பணியாளர்களுக்கும் ஊதியம் வழங்க வேண்டும். அனைத்து கொள்முதல் நிலையங்களிலும் தனியார் முகமை சார்பில், சுமைத் தூக்கும் தொழிலாளர்களைப் பணியமர்த்தம் செய்ய வேண்டும்.

உள்ளூர் அரசியல் மற்றும் விவசாய சங்கங்களின் தலையீடு இல்லாமல் இருக்க வழிவகை செய்ய வேண்டும். பணியாளர்கள் வசிப்பதற்கு ஏற்றவாறு 20 கி.மீ. தொலைவுக்குள் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திலேயே பணியமர்த்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பருவகால கொள்முதல் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

பாம்பு கடித்து சிறுவன் உயிரிழப்பு

மண்ணச்சநல்லூர், ஜூலை 28: திருச்சி மாவட்டம், எம்.ஆர்.பாளையம் பகுதியில் பாம்பு கடித்த 11 வயது சிறுவன் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி திங்கள்கிழமை உயிரிழந்தார்.

எம்.ஆர். பாளையம் பகுதியைச் சேர்ந்த விவசாயி ரவியின் மகன் ஜெய் தனுஷ் (11). இவர் பாடாலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 6-ஆம் வகுப்பு படித்து வந்தார்.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜெய் தனுஷ் விவசாயத் தோட்டத்தில் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது, எதிர்பாராதவிதமாக ஜெய்தனுஷை கட்டுவிரியன் பாம்பு கடித்துவிட்டது.

பெற்றோர் அவரை மீட்டு முதலில் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கும், பின்னர் மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி திங்கள்கிழமை ஜெய் தனுஷ் உயிரிழந்தார். புகாரின்பேரில், சிறுகனூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.

துறையூரில் அஞ்சல் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

துறையூர், ஜூலை 28: துறையூரில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, அஞ்சலக (பிபிஇஎப், பிபிஇஒ உள்ளிட்ட அஞ்சல் ஊழியர்கள் சங்கத்தினர்) ஊழியர்கள் செவ்வாய்க்கிழமை அஞ்சலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அஞ்சல் அலுவலகங்கள், ரயில்வே மெயில் சேவையில் பணியாற்றவே ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இலக்குகள் என்ற பெயரில் இலாகா மற்றும் ஜிடிஎஸ் ஊழியர்களின் சுரண்டலை உடனடியாக நிறுத்த வேண்டும்.

நகரங்களுக்கு இடையேயான ஆர்டிஎன் சேவையை உடனடியாக நிறுத்திவிட்டு, ரயில்வே மெயில் சேவை பிரிவுகளை மீண்டும் தொடங்க வேண்டும். பழைய டெலிவரி முறையை மீண்டும் கொண்டுவர வேண்டும் மற்றும் என்டிசி முறையை உடனடியாக நிறுத்த வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மதிய உணவு வேளையின்போது நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அஞ்சலக ஊழியர்கள் சங்கங்களைச் சேர்ந்த வி.ஜெயகுமார், விஜயகுமார், முருகேசன், தா.பேட்டை நவநீதன், முரளி, செந்தில் உள்பட பலர் பங்கேற்றனர்.

காவிரி ஆற்றில் மீன்கள் இறந்து மிதந்தன

அதிகாரிகள் விசாரணை

காவிரி ஆற்றில் இறந்து கிடந்த மீன்களை செவ்வாய்க்கிழமை அப்புறப்படுத்திய மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள்.

திருச்சி, ஜூலை 28: திருச்சி காவிரி ஆற்றில் இறந்து கிடந்த ஏராளமான மீன்களை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் செவ்வாய்க்கிழமை அகற்றினர்.

மேட்டூர் அணை திறக்கப்படாததால் காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைந்துள்ளது. குடிநீர் தேவைக்காக மட்டுமே அவ்வப்போது நீர் திறக்கப்பட்டு வருகிறது. இதனால், திருச்சி காவிரி ஆற்றில் தண்ணீர் ஆங்காங்கே குளம்போல் தேங்கியுள்ளது.

இந்நிலையில், கம்பரசம்பேட்டை தடுப்பணைக்கும், அம்மா மண்டபம் படித்துறைக்கும் இடையே தேங்கியிருந்த காவிரி நீரில் செவ்வாய்க்கிழமை திடீரென லட்சக்கணக்கான மீன்கள் இறந்து மிதந்தன.

தொடர்ந்து, அப்பகுதியில் இறந்த மீன்களால் துர்நாற்றம் வீசத் தொடங்கியதால், கீதாபுரம் பகுதி மக்கள் திருச்சி மாநகராட்சியிடம் புகாரளித்தனர். இதன்பேரில் அங்கு வந்த மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்கள், இறந்து கிடந்த மீன்களை அப்புறப்படுத்தி, கரையில் புதைத்து, துர்நாற்றம் ஏற்படாமல் இருக்க அதன் மேல் பிளீச்சிங் பவுடரை தூவினர்.

மீன்களின் இறப்புக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

அரசு வேலை வாங்கித் தருவதாக பெண்ணிடம் ரூ. 5.30 லட்சம் மோசடி

திருச்சி, ஜூலை 28: திருச்சியில் அரசு வேலை வாங்கித் தருவதாக பெண்ணிடம் ரூ.5.30 லட்சம் மோசடி செய்யப்பட்டது தொடர்பாக போலீஸார் திங்கள்கிழமை வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

திருச்சி வயலூர் சாலை, ரெங்கா நகரைச் சேர்ந்த மணிகண்டன் மனைவி வசந்தி (52). இவருக்கு புதுக்கோட்டை மாவட்டம், கொளத்தூரைச் சேர்ந்த அ. இருதயராஜ் (50) என்பவர் கடந்த 2022-ஆம் ஆண்டு அறிமுகமாகியுள்ளார். அப்போது, அவர் வசந்தியின் மகனுக்கு நீதிமன்றத்தில் அரசு வேலை வாங்கித் தருவதாகக் கூறியுள்ளார்.

இதை நம்பிய வசந்தி, தனது மகனின் வேலைக்காக கடந்த 2022 ஆகஸ்ட் முதல் 2025 மே வரை இருதயராஜிடம் பல்வேறு தவணைகளில் ரூ. 5.30 லட்சத்தை கொடுத்துள்ளார். ஆனால், பணத்தை வாங்கிக்கொண்ட இருதயராஜ் கூறியபடி அவருடைய மகனுக்கு அரசு வேலை வாங்கித் தரவில்லை. மேலும், கொடுத்த பணத்தையும் திருப்பித் தரவில்லை.

இதுகுறித்து அரசு மருத்துவமனை காவல் நிலையத்தில் வசந்தி திங்கள்கிழமை அளித்த புகாரின்பேரில், இருதயராஜ் மீது போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

ஆன்லைன் லாட்டரி: பெண்ணிடம் ரூ. 2 லட்சம் மோசடி

திருச்சி, ஜூலை 28: திருச்சியில் ஆன்லைன் லாட்டரி மூலம் பெண்ணிடம் ரூ. 2 லட்சம் மோசடி செய்யப்பட்டது குறித்து சைபர் குற்றப் பிரிவு போலீஸார் திங்கள்கிழமை வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

திருச்சி உறையூர் ராமலிங்க நகரைச் சேர்ந்த துரைராஜ் மனைவி உஷா (39). இவர் அண்மையில் கைப்பேசியில் இன்ஸ்டாகிராம் செயலியில் வந்த 'கேரளா மாஸ் லாட்டரி' என்ற விளம்பரத்தை பார்த்து லாட்டரி வாங்க விண்ணப்பித்தார்.

இதையடுத்து, அவரை தொடர்புகொண்ட நபர் ஒருவர், பணம் கொடுத்து லாட்டரி வாங்கிக் கொள்ளுங்கள் என்று தெரிவித்துள்ளார். உஷாவும் அவர் கூறியபடி ஆன்லைன் லாட்டரியை வாங்கியுள்ளார்.

இதைத் தொடர்ந்து கடந்த ஜூலை 25-ஆம் தேதி மீண்டும் உஷாவை தொடர்புகொண்ட அந்த நபர் உங்களுக்கு ஆன்லைன் லாட்டரியில் பரிசு விழுந்துள்ளது என்றும், அந்தத் தொகையைப் பெறுவதற்கு வரி செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதை நம்பிய உஷா, அந்த நபர் கூறிய வங்கிக் கணக்கிற்கு 2 லட்சத்து 498 ரூபாயை அனுப்பியுள்ளார். பணத்தைப் பெற்றுக்கொண்ட அந்த நபர், அதன்பிறகு உஷாவை தொடர்பு கொள்ளவில்லை. இவராலும், அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை.

இதையடுத்து, தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த உஷா, சைபர் குற்றப் பிரிவில் ஆன்லைன் மூலம் புகார் அளித்தார். இதுகுறித்து திருச்சி சைபர் குற்றப் பிரிவு போலீஸார் திங்கள்கிழமை வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ரயிலில் தங்க நகைகள் திருட்டு வழக்கு திருச்சிக்கு மாற்றம்

சென்னை, ஜூலை 28: சென்னையில் விரைவு ரயிலில் நகைகள் திருடப்பட்ட வழக்கு திருச்சி இருப்புப் பாதை போலீஸாருக்கு மாற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக ரயில்வே ஊழியர்களிடமும் விசாரணை நடைபெற்றது.

சென்னை வேப்பேரியைச் சேர்ந்த தீபஷன் ஷெட்டி, தியாகராய நகர் பகுதியில் உள்ள நகைக் கடையில் பணியாற்றுகிறார். நகையை விற்க மதுரைக்கு கடந்த சில நாள்களுக்கு முன்பு 2 கிலோ வைரம் பதித்த தங்க மோதிரங்களைக் கொண்டு சென்ற அவர் மீண்டும் நகைகளுடன் கடந்த 25- ஆம் தேதி விரைவு ரயிலில் சென்னை திரும்பினார். அப்போது, 2 கிலோ நகை இருந்த பையை மர்ம நபர்கள் திருடிச் சென்றனர்.

இதுகுறித்து தாம்பரம் இருப்புக் காவல் ஆய்வாளர் (பொ) சசிகலா வழக்குப் பதிந்து விசாரணை நடத்தினார். மேலும், 10 தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டன. நகைப் பையில் ஊழியரின் எண்ம கைக்கடிகாரம், நவீன கைப்பேசி ஆகியவை இருந்ததும் தெரியவந்தது.

இதற்கிடையே திருச்சி பகுதியில் நகை இருந்த பை மற்றும் எண்ம கைக்கடிகாரம், நவீன கைப்பேசி ஆகியவை சாலையோர புதரிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் 12 பவுன் மதிப்புள்ள வைர மோதிரங்களும் மீட்கப்பட்டுள்ளன. அவற்றை ரயில்வே ஊழியரிடமிருந்து மீட்டதாக இருப்புப் பாதை போலீஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் மோதிரங்கள் தண்டவாளப் பகுதியில் கிடந்ததாகவும், அதைத் தான் எடுத்ததாகவும் ஊழியர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. தங்க மோதிரங்களை எடுத்து பையை மர்மநபர் வீசியபோது மோதிரங்கள் சிதறியிருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது.

கண்காணிப்புகேமரா காட்சி பதிவுகள் மூலம் விரைவு ரயில் திருச்சிப் பகுதியில் வந்தபோது தான் நகைப்பை திருடப்பட்டது தெரியவந்துள்ளது. அதனால், வழக்கை திருச்சி பகுதி இருப்புப் பாதை காவல் பிரிவுக்கு மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக சென்னை எழும்பூர் இருப்புப் பாதை போலீஸ் துணைக் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

INDEL MONEY

Corporate office: Indel Money Limited
IIIrd Floor Indel House, Changampuzha Nagar,
South Kalamassery, Ernakulum -682033
T: 0484-2933999 E:customercare@indelmoney.com

GOLD AUCTION NOTICE

எங்களுடைய பல்வேறு கிளைகளில் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகள் 27-08-2026 தேதி காலை 11:00 மணிக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள கிளையில் வைத்து பகிரங்க ஏலம் விடப்படும் என்பதனை இதன் மூலம் தெரியப்படுத்திக் கொள்கிறோம். நகை கடன் பெற்றதும் வட்டி செலுத்தாமல் மீட்காமல் விட்ட நகைகளைத்தான் ஏலம் விடுவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏலத்தில் விடப்படும் கடன் எண்களின் விபரம் அந்தந்த கிளைகளின் அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. இதற்கு மேல் எந்த அறிவிப்பும் செய்யப்படமாட்டாது.

புதுக்கோட்டை – 12404790014569, 12404800014573, 0480/14673, **தஞ்சாவூர்** – 10604800010860, **திருச்சி பீமா நகர்** – 20204790007945, 0479/07966, **கும்பகோணம்** – 12304790011115, 0479/11117, 12304800011131,

அறிவிக்கப்பட்ட தேதியில் கிளையின் ஏலம் நிறைவடையவில்லை என்றால், Shriram Automall India Limited (SAMIL) மூலம் அவர்களின் ஆன்லைன் இ-ஏல தளமான https://gold.samil.in மற்றும் e-Procurement Technologies Limited (AuctionTiger) மூலம் அவர்களின் ஆன்லைன் இ-ஏல தளமான https://egold.auctiontiger.net வழியாக 29-08-2026 தேதி 12.30 PM முதல் 3.30 PM வரை நடைபெறும். 29-08-2026 தேதி அன்று ஈ-ஏலம் நிறைவடையவில்லை என்றால், அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் அடுத்த வேலை நாட்களில் மீண்டும் ஏலம் விடப்படும்.

இன்டல்மணி லிமிடெட், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

NAME CHANGE

I, KARTHIKEYAN Son of Anbalagan aged about 44 years and residing at 5-179/59B, Keezhatheru, Kadarangondan, Jayamkondam, Ariyalur District, Pin Code - 612 901 do hereby solemnly affirm that in my daughter Passport name mentioned as **"AADHYA"** and in Aadhaar card name was mentioned as **"AADHYA K.M"**. I state that the above names **"AADHYA"** and **"AADHYA K.M"** are one and the same person that is my daughter only and in her passport the name should be changed as **"AADHYA K.M"**

KARTHIKEYAN
29.07.2026

திருப்பூர் மாநகராட்சி

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்.H1/3440/2026 நாள் : 28.07.2026

1. பொது நிதி **2026-27**ன் கீழ் திருப்பூர் மாநகராட்சியில் சுகாதார பிரிவில் கீழ் **பல்வேறு பணிகளுக்கான பணியாளர்களை வெளிமுகமை மூலம் பணியமர்த்துதல் பணி** மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.
2. மேற்படி திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை **ரூ.381.70 இலட்சம்** ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை **https://tntenders.gov.in** இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **https://tntenders.gov.in** இணையதள முகவரியில் **30.07.2026** முதல் **17.08.2026** வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்ததாரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் **07.08.2026** அன்று காலை **11.00** மணியளவில் **திருப்பூர் மாநகராட்சி அலுவலகத்தில்** நடைபெறும்.
6. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் **17.08.2026** அன்று மாலை **3.00 மணி** வரையில்.
7. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **17.08.2026** அன்று மாலை **3.30 மணி**.
8. ஒவ்வொரு பணியின் மதிப்பீட்டுத் தொகை மற்றும் டேவணித் தொகை, ஒப்பந்ததாருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியவும்.

ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி

செ.ம.தொ.இ/2381/ஒப்பந்தப்புள்ளி/2026

इंडियन बैंक Indian Bank

தலைமை அலுவலகம்: தங்கக் கடன் வணிகப் பிரிவு
தொலைபேசி: 044 - 2813 2372 / 2371 / 4391

e-டெண்டர் அறிவிப்பு

தங்கக் கடன் நகைப் பைகள் கொள்முதல் செய்வதற்காக, Indian Bank சார்பில் GeM Portal மூலம் e-டெண்டர் கோரப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு, எங்கள் வங்கியின் இணைய தளமான **https://indianbank.bank.in/en/tender** மற்றும் **GeM Portal https://gem.gov.in** (GeM Bid No: **GEM/2026/B/7839828**) ஆகியவற்றைப் பார்வையிடவும்.

துணைப் பொது மேலாளர் (GCB Vertical)

Change of Name

I, PHILOMINA ERUTHYARAJ, D/o. ERUDHAYARAJ, residing at No.17/5, 1st Floor, Pillaiar Kovil Street, Natarajapuram, Namakkal Dt-637007, shall henceforth be known as **PHILOMINA ERUDHAYARAJ.**

PHILOMINA ERUTHYARAJ
Trichy, 28.07.2026

Change of Name

I, LATHIBU NISHA JAMAL MOHAMED, W/o. HAJA MYDEEN, residing at Door No.1/21A, Ibrahim Nagar, Chakkarapalli 614211, Papanasam Taluk, Thanjavur District, Tamil Nadu, India, shall henceforth be known as **LATHIBU NISHA HAJA MYDEEN**

LATHIBU NISHA JAMAL MOHAMED
Thanjavur, 22.07.2026.

ਪੰਜਾਬ ਨੈਸ਼ਨਲ ਬੈਂਕ பஞ்சாப் நேஷனல் வங்கி ...the name you can BANK upon !

SAMB சென்னை, 4வது தளம், PNB டவர்ஸ், எண்.46-49, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014.
தொலைபேசி: 044-28112261-90, மின்னஞ்சல்: ZS8341@pnb.bank.in

2002ன் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8 மற்றும் 9ன் கீழ் அசையாச் சொத்திற்கான மின் ஏல விற்பனை குறித்து பொதுமக்களுக்கான அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் 8(6) & 9(1)ன் கீழ் பஞ்சாப் நேஷனல் வங்கியிடம் அடமானத்திலுள்ள ஈடுபெற்ற அசையா சொத்துக்கள் விற்பனை

பஞ்சாப் நேஷனல் வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பஞ்சாப் நேஷனல் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கபூர்வ சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு **M/s. TSN Ecotech International Pvt Ltd**, கடனாளிக்கு கீழே குறிப்பிட்டுள்ள அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களிடமிருந்து பெற வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி, இதர செலவுகளையும் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்துக்கள் **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **14.08.2026** அன்று மின் ஏல விற்பனை செய்யப்படும். என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

ஜாமீன்தாரர் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி : 1) திரு. T. N. சிராஜுதீன், எண். 18/3, சமது பள்ளித் தெரு, காஜா நகர், திருச்சி, 620020. **2) திரு. S. முரளிசுந்தரம்**, 25/21, முதல் தெரு, இந்தியன் வங்கி காலனி, சிம்கோ மீட்டர் சாலை, திருச்சிராப்பள்ளி - 620021. **3) திரு. A. விக்னேஷ்**, 35-A, விஸ்வாஸ் நகர், தஞ்சாவூர் பிரதான சாலை, திருச்சி- 620008.

வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை **30.06.2026** அன்றுள்ளபடி **ரூ.31,19,22,426.09** (ரூபாய் முப்பத்து ஒர் கோடியே பத்தொன்பது இலட்சத்து இருபத்து இரண்டு ஆயிரத்து நானூற்று இருபத்து ஆறு மற்றும் பைசா ஒன்பது மட்டும்) மேலும் **01.07.2026** அன்று முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள். **24.09.2018** அன்று கோரிக்கை அறிவிப்பு **U/S 13(2)** அளிக்கப்பட்டது: **07.01.2019** அன்று சுவாதீன அறிவிப்பு **U/S 13(4)** அளிக்கப்பட்டது;

வகை- கடன்தாரர் பெயர்: **M/s. TSN Ecotech International Pvt Ltd**,
ஜாமீன்தாரர்கள்: 1.திரு.T. N. சிராஜுதீன், 2.திரு.S. முரளிசுந்தரம், 3. திரு.A விக்னேஷ்.
சொத்துக்களை அடமானம் வைத்திருப்பவர் பெயர் : திரு. T. N. சிராஜுதீன்,

அடமான சொத்துக்களின் விபரங்கள்: திருச்சிராப்பள்ளி இணை -I & II சார்பதிவு மாவட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி வட்டம், K. அபிஷேகபுரம் கிராமம், நகராட்சி பழைய வார்டு எண்.1, பழைய T. சர்வே எண்.47, பழைய T. சர்வே எண்.372/2, துணைப்பிரிவின்படி புதிய சர்வே எண்.372/3, தற்போது மாநகராட்சி பழைய வார்டு K, பிளாக் 20, புதிய வார்டு A மற்றும் B, புதிய பிளாக் 20, புதிய T. சர்வே எண்.130/4D & T. சர்வே எண்.130/4E ஆகியவைகளின் அடங்கிய, திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620009, திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், K. அபிஷேகபுரம் கிராமம், கன்டோன்மென்ட், போர்ட்ஸ் சாலை, T. சர்வே எண்.130/4E, பிளாக் 20, வார்டு AB, இல் அமைந்துள்ள பெரிய விஸ்தீரணம் 24838சதுர அடி, அதில் காலி நிலம் 9443சதுர அடி (அதாவது கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி **4722சதுர அடி + 4721 சதுர அடி**) அதனுடன் அதில் உள்ள தற்காலிக ஷெட். **4722 சதுர அடியின் எல்லைகள்:** வடக்கில்: T. சர்வே எண்.130/4D திரு. அசோக்குமார் அவர்களின் சொத்து & T. சர்வே எண்.130/3 பள்ளிவாசல் சொத்து; தெற்கில்: T. சர்வே எண்.130/5A இன் சொத்து; கிழக்கில் : T. சர்வே எண்.130/4E திரு. கிருஷ்ணன் அவர்களின் சொத்து & T. சர்வே எண்.130/4E திரு. பாலாமணி அவர்களின் சொத்து; மேற்கில் : T. சர்வே எண்.132, நடைவழி; **4721 சதுர அடியின் எல்லைகள்:** வடக்கில்: T. சர்வே எண்.130/4E, திரு. பாலாமணி அவர்களின் சொத்து; தெற்கில்: T. சர்வே எண்.130/5A சொத்து; கிழக்கில்: T. சர்வே எண்.131, போர்ட்ஸ் சாலை; மேற்கில்: T. சர்வே எண்.130/4E, திரு. சந்திரன் அவர்களின் சொத்து. **(Coordinates:10.801202,78.687240); Latitude:10.48'04.3"N; Longitude: 78.41'14.1"E; (BAANKNET Property Id: PUNBRAA25946765)**

ரிசர்வ் தொகை: ₹ 6,31,00,000/- பொலிட் செய்ய வேண்டிய தொகை (EMD): 63,10,000/- ஏல உயர்வு தொகை: ₹ 2,00,000/-

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்: ஏதுமில்லை.

மின் ஏல விற்பனை நடைபெறும் தேதி 14.08.2026, நேரம்: காலை 11 முதல் மாலை 5 மணி வரை

EMD செலுத்த கடைசி தேதி 13.08.2026; நேரம்: மாலை 5.00 மணி வரை	அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிடுதல் : 11.08.2026

தொடர்புக்கு: திரு. B. வர பிரசாத், முதன்மை மேலாளர்/அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மொபைல்: 88848 22944
திரு. பிரயாக் ராஜ் சாஹு, சட்ட அதிகாரி, மொபைல்: 74770 57944

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையானது கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொறுத்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (1). "எங்கு உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்ன உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "எல்லாம் உள்ளதோ உள்ள நிலையில்" என்ற அடிப்படையில் சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். (2). அட்டவணையில் மேற்குறிப்பிட்ட பிணைச் சொத்துக்களின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த தகவலுக்குக் கூறப்பட்டுள்ளன, எனினும் இந்த பிரகடனத்தில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுதல்கள் ஏதேனும் இருப்பின் ஆகியவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பதிலளிக்கமாட்டார். (3). விற்பனையானது கீழே கையொப்பமிட்டவரால் **14.08.2026** அன்று காலை **11.00** மணி முதல் மாலை **05.00** மணி வரை **https://www.baanknet.com** என்ற இணைய தளம் மூலமாக நடத்தப்படும். (4). விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.baanknet.com & www.pnbindia.in** ஆகிய இணையதளங்களில் காணலாம்.

SARFAESI சட்டம் 2002 விதி 8 (6) & 9 (1) ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு.

தேதி : 28.07.2026
இடம் : சென்னை

முதன்மை மேலாளர் / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பஞ்சாப் நேஷனல் வங்கி, பிணையக் கடன் வழங்கிய வங்கி

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்

(முன்னர் சுந்தரம்-கிளேட்டன் டிசிடி லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006
இணையதளம் : www.sundaram-clayton.com தொலைபேசி : 044 - 28332115, மின்னஞ்சல் : corpsec@sundaramclayton.com
CIN : L51100TN2017PLC118316

30 ஜூன் 2026 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தனித்த மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள்

(ரூ. கோடிகளில்)

வ. எண்	விவரங்கள்	தனித்தது			ஒருங்கிணைந்தது		
		முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு
		30.06.2026	30.06.2025	31.03.2026	30.06.2026	30.06.2025	31.03.2026
		(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)	(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)
1	வியாபார நடவடிக்கைகளின் மூலம் வருமானம்	524.22	442.12	1,788.55	591.65	511.64	2,025.61
2	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	22.79	22.40	113.34	(53.09)	(52.07)	(185.46)
3	விதிவிலக்கான வகைகளுக்குப் பின் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	22.79	22.40	626.83	(53.09)	(52.07)	328.03
4	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்)	17.04	17.01	552.23	(59.33)	(57.76)	252.38
5	நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம் / (நஷ்டம்)]	21.47	13.78	546.35	(56.83)	(58.42)	334.27
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.5/-)	11.02	11.02	11.02	11.02	11.02	11.02
7	ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)	-	-	1,949.49	-	-	1,284.38
8	பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (ரூபாயில்)						
	(அ) அடிப்படை	7.73	7.72	250.48	(26.91)	(26.20)	114.48
	(ஆ) டைல்யூட்டட்	7.73	7.72	250.48	(26.91)	(26.20)	114.48

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு, ஜூலை 28, 2026 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுவின் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. இந்த நிதிநிலை முடிவுகள் குறித்து நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் மாற்றப்படாத கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.
2. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் 2015ம் வருடத்தைய செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் இணையதளம் (www.bseindia.com மற்றும் www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.sundaram-clayton.com) ஆகியவற்றிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
3. முந்தைய காலத்திற்கான தொகைகள் நடப்புக் காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
4. ஜூன் 30, 2026 அன்றுடன் முடிவடைந்த காலாண்டுக்கான நிறுவனத்தின் நிதிநிலை முடிவுகளை கீழே உள்ள QR குறியீட்டின் மூலம் அணுகலாம்:

தேதி : 28.07.2026

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
வேணு சீனிவாசன்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்